2010 ஏப்ரல் 27]

109—

தரம் உயர்த்துதல்

***63064—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவதிகையில் உள்ள பாவாடைபிள்ளை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவதிகையில் உள்ள பாவாடைபிள்ளை அரசு உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2.00 இலட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்குப் போதுமான இடவசதியும் இல்லை. தவிர, இப்பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மேற்கண்ட சூழ்நிலையில், இக்கோரிக்கையை இவ்வாண்டு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதி, திருவதிகை பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். பாவாடைபிள்ளை அவர்கள் அந்தப் பள்ளிக்கான இடத்தைத் தந்ததால், அவருடைய பெயரில் அந்தப் பள்ளி இயங்குகிறது. தமிழ்நாட்டிலே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் சிறப்பாக நடந்துவரும் இந்தத் துறையில், எனக்குத் தெரிந்து 20 மீட்டர் அகலத்தில், 80 மீட்டரில் ஒரு உயர்நிலைப் பள்ளி அரசின் சார்பில் இயங்கி வருகிறதென்று சொன்னால், அது என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற இந்தப் பள்ளிதான். அதனால், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு சிறப்புக் கவனம்*

எடுத்து, அரசுக்குச் சொந்தமான வேறு ஏதாவது இடத்தைத் தேர்வு செய்து, இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், வேறு இரண்டு பள்ளிகள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அவை தனியார் பள்ளிகள். இரண்டு அரசுப் பள்ளிகள். அங்கு போதுமான இடவசதி இல்லை. குறிப்பாக, மாணவிகள் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். ஆதலால், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதோடு, மாணவர் பிரிவில், மாணவிகள் சேர்வதற்குமான உத்தரவையும் சேர்த்து வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், கூடுதல் இடத்தையும் தந்து, கட்டடம் கட்டி, அந்தப் பள்ளி சீராக இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தப் பள்ளியிலே, இப்போது 36 ஏக்கர் இடம்தான் இருக்கிறது. மிகக் குறைந்த இடத்திலே இருக்கிறது. ஒரு மேல்நிலைப் பள்ளி அமைய வேண்டுமென்று சொன்னால், அது ஊரகப் பகுதியாக இருந்தால், 5 ஏக்கர் நிலம் வேண்டுமென்று அரசாணை இருக்கிறது. எங்களைப் பொறுத்தமட்டில், போதுமான நிலத்தைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியிலே, சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈடுபட்டு, போதுமான நிலத்தைப் பெற்றுத் தருவார்களென்று சொன்னால், அங்கே மேல்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராயும்.

தவிர, பொதுமக்களுடைய பங்குத் தொகை ஏற்கெனவே செலுத்தியிருக்கக்கூடிய ஏராளமான பள்ளிகள் இருக்கிறபோது, அந்தப் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நிலையிலேயும் அரசு இருக்கிறது. ஆய்வகங்கள் போன்ற வசதிகளை

2010 ஏப்ரல் 27]

உருவாக்க வேண்டிய சூழ்நிலையில், போதுமான இடவசதியைக் கொடுப்பதற்கான முயற்சியை முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தருவார்களேயானால், பிற்காலத்திலே இதைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாகப் பணம் கட்டினாலும் இடவசதி காரணமாக அங்கு மேல்நிலைப் பள்ளி வருவதற்கு வாய்ப்பில்லை என்ற அடிப்படையில், பொதுமக்கள் பணம் தர முன்வரவில்லை. பொதுமக்கள் பணம் தர முன்வரவிருக்கின்ற, வெங்கடம்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை நடப்பு நிதியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும், அதேமாதிரி சம்மட்டிக்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், நான் பிறந்த எனது சொந்தக் கிராமமான புலியூர் காட்டுசாகை என்னும் கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியை, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு என்னுடைய வேண்டுகோளை ஏற்று அதை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்ததற்காக எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நான் கோரிக்கையாக வைத்த இரண்டு பள்ளிகளையும், இந்த ஆண்டு, ஒன்றை மேல்நிலைப் பள்ளியாகவும், இன்னொன்றை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு, மாண்புமிகு முன்னாள் இரயில்வே தொடர் வண்டித் துறை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களுடைய சொந்தக் கிராமத்தில் உள்ள, அவர் பயின்ற பள்ளியை, நடப்பு நிதியாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சிறப்பு அனுமதியைப் பெற்று, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2010 ஏப்ரல் 27

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவருடைய கோரிக்கையை ஏற்று, அவருடைய சொந்தக் கிராமத்தில் உள்ள பள்ளியை இந்த ஆண்டு அரசு தரம் உயர்த்தித் தந்திருக்கிறது. ஏனைய கிராமங்களைப் பொறுத்தமட்டில், அரசு விதித்திருக்கக்கூடிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பட்சத்தில், இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக்கூடிய பட்டியலில் இணைப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அதேசமயம், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, இந்த ஆண்டு தேர்வு செய்யக்கூடிய பள்ளிகளுடைய பட்டியல் இறுதி செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. வரக்கூடிய ஆண்டுகளிலே அந்தப் பட்டியலில் இவற்றை இணைத்து, மத்திய அரசினுடைய "அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின்" கீழே எடுத்துக்கொள்ளக்கூடிய பள்ளிகளில் ஒன்றாக இணைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புகளை அரசு நிச்சயமாக ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்" என்ற பாடலுக்கு இலக்கணமாக, உயர்நிலைக் கல்வியாக இருந்தாலும் சரி, பள்ளிக் கல்வியாக இருந்தாலும் சரி, கல்வியிலே ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்ற, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய திருமயம் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில் என்னுடைய தொகுதியில், 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தியதோடு, 4 தேர்வு மையங்களையும் தந்திருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு

2010 ஏப்ரல் 27]

என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டு அரிமளம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், எல்லோர் முன்னிலையிலும் நான் என்னென்ன செய்திருக்கிறேன் என்ற விஷயத்தை போட்டு உடைத்துவிடக்கூடாது. இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் என்னை பார்க்கக்கூடிய பார்வையை நீங்கள் அறிய வேண்டும். (சிரிப்பு) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிமளம் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக அவர் அந்தக் கோரிக்கையை இந்த அவையிலே வலியுறுத்திக் கொண்டு வருகிற காரணத்தினால், இந்த ஆண்டு நிச்சயமாக அதற்கு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி நகரத்தில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 4,500 மாணவியர்கள் படித்து வருகிறார்கள். அங்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினாலே கூடுதலான கட்டடங்கள் கட்டுவதற்கான வாய்ப்புகள்கூட மிகக் குறைவாக இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், அங்கே போக்குவரத்து நெரிசலும் அதிகமாக இருக்கிறது. ஆசிரியர்கள் பற்றாக்குறையும் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கேயிருக்கின்ற தனியார் பள்ளிகளுடன் போட்டியிட்டு ஒரு சிறந்தப் பள்ளியாக, நல்ல மதிப்பெண்களைப் பெறக்கூடிய பள்ளியாக அந்தப் பள்ளி மிகச் சிறப்பாக இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. ஆனால், அதிகமான மாணவியர்கள் படித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இடவசதி, கட்டட வசதி, போக்குவரத்து நெரிசல் இப்படியெல்லாம் சில சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த நகராட்சியில் பெண்கள் உயர்நிலைப்

பள்ளி ஒன்று மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்தால், அந்தப் பள்ளியில் இடவசதி பற்றாக்குறையைக் குறைப்பதற்குண்டான வாய்ப்புகள் இருக்கும். ஆகவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே எனது தொகுதிக்குப் பல பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே அவர்களுக்கு நன்றி சொல்வதோடு, பள்ளி மாணவியர்களின் சிரமங்களைப் போக்க, இந்த ஆண்டு அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை, அரசு விதித்திருக்கக்கூடிய விதிமுறைகளுக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பிருக்கும் என்று சொன்னால், அங்கேயிருக்கின்ற முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலிருந்து அதற்கான முன்மொழிவுகளை இந்த ஆண்டு பெற்று, நிச்சயமாக அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கை: என்னுடைய திருப்போரூர் தொகுதியிலே, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள, காரணிபுதுச்சேரி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், நான் தொடர்ந்து 4 வருடங்களாக நம்முடைய மாவட்டச் செயலாளர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனவே, தயவுகூர்ந்து இந்த ஆண்டாவது அந்தப் பள்ளியை தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் 4 வருடங்களாகத் தொடர்ந்து தொழிலாளர் நலத் துறையில்தான் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து அறிய முடிகிறது. இப்போதுதான் முதல் முறையாக பள்ளிக் கல்வித் துறையிலே அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார். இதனை கருத்திலே கொண்டு அதற்கு ஆவன செய்யப்படும்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலைத் தொகுதி, இணங்கூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியிலே சுமார் 1,000—க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். இந்தப் பள்ளி முழுக்க முழுக்க கிராமச் சூழ்நிலையில் அமைந்துள்ள பள்ளி. அவர்கள் மேல்நிலைப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் 15 கிலோ மீட்டர் கடந்து, குளித்தலை நகரப் பகுதிக்கு வரவேண்டிய சிரமமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். மேலும் அந்த மேல்நிலைப் பள்ளிக்குச் செலுத்தவேண்டிய பொதுமக்கள் பங்குத் தொகையும் செலுத்தப்பட்டு, தரம் உயர்த்த வேண்டிய அத்தனை தகுதிக்குட்பட்ட பள்ளியாக அந்தப் பள்ளி விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இணங்கூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று உங்கள் மூலம் கேட்டு, மேலும், என்னுடைய குளித்தலை தொகுதியில் இதுவரை ஒரு பள்ளிக்கூடம்கூட மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லி, ஆகவே, இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இணங்கூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று அன்போடு, பணிவோடு உங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2010 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய குறை இந்த ஆண்டு நிச்சயமாக நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதி, குண்டூர் ஊராட்சியில், குண்டூர் பர்மா காலனி என்கிற பகுதியிலே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே, சுமார் 300-க்கும் அதிகமான மாணவர்கள் பயின்றுகொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியைச் சுற்றி திருவளச்சிப்பட்டி, குண்டூர், ஐயம்பட்டி, அயன்புதூர், கும்பக்குடி, வேலாயுதன்குடி, புதுக்கோட்டை மாவட்டத்தில் சில கிராமங்கள், இத்துணை கிராமங்களும் அந்தப் பள்ளியைச் சுற்றியிருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கிற மாணவர்கள் தங்களுடைய நடுநிலைப் பள்ளிக் கல்வியை முடித்தவுடன் உயர்நிலைப் பள்ளியில் படிப்பதற்குத் தொலைவிலுள்ள மாநகராட்சிப் பள்ளிகளுக்குச் சென்றுதான் அவர்கள் உயர்நிலைக் கல்வியைத் தொடர முடிகிறது. அதுவும் ஏழை மாணவர்கள் பயிலுகின்ற பள்ளியாக அந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி விளங்கிக் கொண்டிருக்கிறது. ஏழை மாணவர்களுடைய நலன் கருதி, குண்டூர் பர்மா காலனியிலே இயங்குகின்ற அந்த நடுநிலைப் பள்ளியை இந்த ஆண்டே அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தமட்டில், 5 கிலோ மீட்டருக்குள்ளாக ஒரு உயர்நிலைப் பள்ளியினை அமைக்க வேண்டுமென்கின்ற ஒரு கொள்கையினை வகுத்துக்கொண்டு அதனடிப்படையில் பல நடுநிலைப் பள்ளிகளைத் தரம்

2010 ஏப்ரல் 27]

உயர்த்தக்கூடிய முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்கிறோம். அனைவரும் இடைநிலைக் கல்வித் திட்டத்தை முறையான வகையிலே பயன்படுத்திக்கொண்டு, மிக அதிகமான பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய ஒரு வாய்ப்பை இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய தமிழகம்தான் பெற்றிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை அன்றைக்கு அந்தக் கூட்டத்திலே வலியுறுத்தி மைய அரசாங்கத்திலிருந்து அனுமதியை நாம் பெற்றிருக்கிறோம். எனவே, முதற்கட்டமாக 200 பள்ளிகள் இந்த ஆண்டு தரம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. வரக்கூடிய காலங்களில் அவர் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளி, அந்தத் தேவைகள் அங்கே இருக்குமென்று சொன்னால், அதைப் பட்டியலிலே இணைத்துக்கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

110—

தொழிற்பேட்டை

***61374—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.